பதிவு எண்—M. 5720   வெள்ளிக் கிழமையில் ... ருகுல் தாள்

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு - சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

...லம், மாம்பாக்கம் ; நந்தன, பங்குனி; 10—4—53   தளிர்-28

...தின் குறிக்கோள் :

...பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

அன்பின் பங்கு

வாழ்க்கையில் முக்கிய பங்கு அன்புக்கு உண்டு. உடல் எடுத்த ...யிர்கட்கு அன்பு உண்டாகின்றது. அதைப் பெருக்கிக் கொள்ள ...ம் வாய்ப்புகள் பிறவியில் அமைந்திருக்கின்றன. அன்பு உள் ...ன்பாய் இருந்தால் வாழ்க்கையில் இயைந்து ஆற்றலாய் இயக்கங் கொ...கின்றது. உள்ளன்பை மெய்யன்பென்றும் சொல்லலாம். யாக்கை யகத்து ஓர் உறுப்புப்போல் அந்த அன்பு உதவுகின்றது. உடம்புக்கு உறுப்புகள் எவ்வளவு பங்கெடுத்து உதவுகின்றனவோ, அவ்வளவுக்கு, வாழ்க்கையுறுப்பாய் அன்பு திகழ்கின்றது.

மக்களில் பலர், வீடு வாசல் நிலம் நீர் வயது வாய்ப்பு ஏவலர் முதலிய நலங்களே வாழ்க்கை யினிமைக்கு முக்கிய உறுப்புகள் என்று கருதி, அல்லும் பகலும் தம் ஆற்றலையும் அறிவையும் செல விட்டுத் தேடுகின்றனர். அவ்வளவுக்கு அன்பைத் தேட முயன்றால், மேற்கூறிய நலங்களெல்லாம் அமைவதோடு அவற்றிற்கு மேன்மேல் வளர்ச்சியும் அவற்றால் பெரும்பயனும் காணலாம்.

...லா தவர்கட்கு எவை இருந்தும் பயனை வழியில் உதவி ...ய கோட்டைகள் படைகள் போர்க் கருவி ...ன்ற பாதுகாப்புகளும், செல்வம் கல்வி ...ழ் முதலிய பெருமிதங்களும் உள்ளத்தே ... பகையாகவும் மாறி விடக் கூடும். ...ன்பே பெரும் பாதுகாப்பாகவும் உயர்ந்த ...து, உற்ற கேரத்திலும் உதவுகின்றது.

...ப பொருள்களும் ஆகிய எல்லாம். ஒரு தட்டி ...ட்டும் தனித்து ஒரு தட்டிலும் இருத்தித் தலையை மதிப்பால் அன்பின் தட்டே இணையற்ற ...ழும். உலகத்தில் அன்பு அவ்வளவு நிகரற்ற ...கின்றது. அதனாலேதான் வாழ்க்கையில் அன்பின் ...கி என்பது! அன்பை வளர்த்துக் கொள்ளாதவர்கள் ...தகுதியற்றவர்கள் என்பது, இதனாலெல்லாம் இனிது ...படும்.

புறத்துறுப் பெல்லாம் எவன்
செய்யும்? யாக்கை
அகத்துறுப் பன்பி லவர்க்கு.

யாக்கை அகத்து உறுப்பு- உடம்பின் உள் உறுப்புப்போல் வதாகிய, அன்பு இல்லவர்க்கு- அன்பு இல்லாதவர்க்கு, புறத்து உறுப்பு எல்லாம் - புறத்திலுள்ள உறுப்புப் போல்வனவாகிய இடம் பொருள் ஏவல் முதலியன வெல்லாம், எவன் செய்யும்- வாழ்க்கைக்கு என்ன பயன் செய்யும்?

அன்பை உடையவர்க்கே எல்லாப் பொருள்களும் பயன் படும் என்றபடி. வாழ்க்கையில் அன்பே முக்கிய பங்கு எடுப்ப தாதலின் அதனை உறுப்பென் றும், உடம்பின் தொடர்பால் உயிர்க்கு அன்பு உண்டாதலா லும் உள்ளன்பாய் திகழ வேண்டு தலாலும் அகத்துறுப் பென்றும் விதந்தார்.

யாக்கையை அகம் என்ப வாதலின், புறத்து உறுப்பு என் பது இடம் பொருள் முதலிய புறச் சூழலை உணர்த்திற்று.

சூழலை விட வாழ்க்கைக்கு அன்பே முதன்மை என்பது பெறப்பட்டது. எல்லாம் என்றதும் இதனை விளக்கிற்று.

y concerned DDC

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
5-ம் ஆண்டுக் கையொப்பம்
(3-10-52 முதல்)

உள் நாடு	ரூ.	4	0	0
வெளி நாடு	ரூ.	6	0	0
தனித் தாள்	.	0	1	0
ஆயுள் —				
கையொப்பம்	ரூ.	100	0	0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.

கிளை	நந்தன, பங்குனி,	தளிர்
5	10-4-53 வெள்ளி	28

அக்கறை வேண்டும்

1953 அக்டோபர் 1ல் ஆந்திர மாகாணம் அமைய விருக்கிறது.

இந்திய ஆட்சிக்குள் நிலையான அமைதியும் உறுதியும் உண்டாகத்தக்க மொழிவழி மாகாண அமைப்பு முறையை வற்புறுத்தி வெற்றி பெற்ற ஆந்திரர்கள் சரித்திராசிரியரால் என்றும் பாராட்டப்படுவார்கள் என்பதில் ஐயமில்லை.

காரணம், உலகின் ... மலர்ச்சிகளுக்கெல்லாம் ... அடிப்படை அவரவர் மொழியும், அவரவர் கலைகளுமே எல்லாம் அடிப்படை அவரவர் சமயமுமே ஆதலின் என்க.

மொழிவழி அமையாத உலகியல் நலம் எதுவும் நீண்ட நாளைக்கு நிலைக்காது; அதற்கு எதிரான எந்த முயற்சிகளும் நாளடைவில் ஒழிந்தேபோகும்; மொழிக்கு அத்தகைய உயிராற்றல் உண்டு; இவ்வுண்மைகளை உணர்வார்க்கே இம் மொழிவழி மாகாண அமைப்பின் சிறப்பு நன்கு விளங்கும்.

இனி, இயற்கை மொழியாகிய நம் தமிழுக்கு இவ் உயிராற்றல் மிகுதி. அதனால்தான் அது தன்னோடு ஒத்த பழைய மொழிகள் எல்லாம் (சீனத்தைத் தவிர) அழிந்து அல்லது மொழி வழக்கிழந்துவிட்ட பிறகும் தான் மட்டும் மேலும் மேலும் துளிர் விட்டுத் தழைத்துக்கொண்டிருக்கின்றது.

ஆந்திர மாகாணம் பிரிகிற போதே தமிழ் மாகாணமும், ஏன்? மற்ற மொழி மாகாணங்களும் பிரியவேண்டுவதுதான் முறை.

இம் மொழிவழி மாகாணப் பிரிவினைகளுக்குப் பின் ஐந்தாண்டுத் திட்டமும் பிற வளர்ச்சித் திட்டங்களும் நடைமுறைக்கு வந்தால் எவ்வளவோ நன்றாயிருந்திருக்கும்.

தமிழர்களின் தலைநகராகிய சென்னையையே தம்முடையது என அழிவழக்கிட்டால்தான், அவர்கள் அவ்வளவாக விழிப்புக் கொண்டு போற்றாத சித்தூர்ப் பகுதிகளைத் தமக்கே ஆக்கிக்கொள்ள முடியும் என்று ஆந்திரிற் சிலர் நினைத்துக்கொண்டிருந்தனர் போலும். அந் நினைவின்படி இருக்கிறது இந்திய ஆட்சியின் இறுதி முடிவுகள்.

தமிழ் தலைவர்கள் இறுதி நேரத்தில் தலைநகருக்காக மட்டுமே ஓரளவு கிளர்ச்சிகள் செய்தார்களே ஒழிய, சித்தூர்ப் பகுதிகள் பற்றித் தக்க அக்கறை காட்டவேயில்லை. அவர்களுக்கே அப் பகுதிகள் பற்றி இப்போது கிளர்ச்சி செய்ய எண்ணம் இல்லை போலும்! இது எவ்வளவு இரங்கத்தக்க நிலை!

உண்மையில் சித்தூர் மாவட்டத்திலுள்ள புங்கனூர், சந்திரகிரி ... கங்குந்தி குப்பம் ... சித்தூர் தி... (தாலுக்காக்க... நாட்டைச் ...சேர... என்பதை அங்குள்ள ... அடுத்துள்ள மதன ... வாயல்பாடி வட்ட மக்களையும் பார்த்தாலே சொல்லிவிடலாம்.

தெலுங்கு பேசுவது ஒன்றை மட்டுமே எண்ணி அங்குள்ள மக்களை ஆந்திரர்கள் என்று முடிவு செய்துவிட முடியுமா? தமிழ் நாட்டில் உள்ள எல்லா ஊரிலும் இருக்கின்றனர் தெலுங்கு பேசும் நன்மக்கள்.

எல்லைகளில் இரு மொழிகளும் கலந்து வழங்குவதும் பல காரணங்களால் ஒன்றைவிட ஒன்று மிகுதியாக வழங்கி விடுவதும் இயல்பேயாகும்.

சித்தூர் மாவட்டத்தை ஆந்திர காங்கிரசுப் பகுதி... (... diction) சே... தமிழ் நா... எதிர்த்தி...

தமிழ்... குறையி... கூடிய நி... மல் வேலை ம... களையே பெரும்பா... அரசியல் கட்சிகளி... திருக்கிறது.

மக்கள் பழிப்புக்கு ... தாமும் மொழி வழி மா...

வேண்டுவதாகத் தமிழ் நாடு காங்கிரசார் அவ்வப்போது புலப்படுத்திக் கொண்டார்களே ஒழிய தக்கபடி அதற்கு முயலவேயில்லை. சித்தூர்ப் பகுதியில் அக்கறை காட்டி, அங்கே போய், நிலைமைகளை நன்கு பரிசிலனை செய்து ஆவன செய்யவில்லை.

... நிலையை எண்ணி அங் ... கொண்டு, ... ஆண்டு ... ஆதாரவைப் ... லலை அறநெறித் ... த்தையும் அதன் ... யும் அமைத்து, அங் ... குத் தமிழ் வகுப்புகளும் ... ர்ச்சிகளும் செய்து ஒவ் ... ாரு சிற்றூரிலும் உள்ள ... மிழ் மக்கள் எத்தனை பேர், ... ற்றவர்கள் எத்தனை பேர்; ... லாருடைய உறவும் வாணிபத் தொடர்புகளும் எங்கே என்றெல்லாம் கணக்கெடுத்து வைத்திருக்கிறார் மங்கலங்கிழார் என்ற பெரியார். எனவே அவர் விரும்புகிறபடி விரும்புகிற போது சென்று வேண்டுவன செய்து வந்திருந்தாலும் எவ்வளவோ நலங்கள் விளைந்திருக்கும்.

தமது ஆதிக்கத்தில் ... சித்தூர்ப் ப... ... ரசா...

பலகைகளைத் தெலுங்கில் மட்டும் மாற்றி எழுதிப் பொறித்திருக்கின்றனர். இவ்வாறெல்லாம் திட்டமிட்டு வேலைசெய்ய இடங் கொடுத்துவிட்டு, இறுதி நாளிலும், "அங்கே தெலுங்கே அதிகம் வழங்குகிறது; ஆகவே அப் பகுதிகள் நமக்குக் கிட்டா" என்பது போல எண்ணிக் கொண்டு, ஏனோ தானோ என்று தமிழ்த் தலைவர்கள் இருந்துவிட்டார்கள் என்பதைச் சுட்டிக்காட்டாமல் இருக்கமுடியாது.

இன்றைக்கு அரசியல் தலைவர்கள் பேசாமல் இருந்துவிட்டால் பிற்காலத்தில் இப் பகுதிகளின் குழப்பங்கள் பேசாமல் இருக்கும் என்று எண்ணிவிடக் கூடாது.

மொழி மட்டுமல்ல மக்களுக்கு உணர்ச்சியூட்டுவது. சமயமும் மக்களுக்கு உணர்ச்சியை ஊட்டும். எண்ணிப்பார்த்தால் மொழியைவிடச் சமயம் மிக்க உணர்ச்சியை ஊட்டும் என்று தெரியும். அருளியல் நலங்களில் அக்கறை பிறந்துவிட்டால் உலகியல் நலங்களைப் புறக்கணிப்பது இயல்பு. இரண்டு நலங்களும் ஒன்றாக வருவதானால் எத்தனை உணர்ச்சி தோன்றும் மக்களுக்கு?

தி... ருப்பதி, திருத்தணி, திருக் ... தி முதலிய சமய நிலையங் ... சித்தூரில் இருக்கின்றன. ... வற்றின் சிறப்பைப்பற்றித் ... மிழ் மக்கள் உணரத் தலைப்பட்டு ... ட்டால் என்ன நேருமோ, தலை ... ரவர்கள் எண்ணிப்பார்க்க வேண் ... டும்.

... வரி 1ல் திருத்தணிக்குப் ... புகழ்க் கூட்டம் ... ம இவ்வெல்லைத் ...

... தம் ஆந்திரப் ... ந்த பொருந்

மலை... நூடி... டா... ரீஸ்... ரீதம் ... த் தோழர்கள் ... யுனைடெட் கன்ஸா... பந்தர்த் தெரு, :: சென்...

தாது. தமிழர்களின் தன்மான உணர்ச்சியை மத்திய அரசினர் சோதித்துச் சோதித்து அதற்கேற்றபடியே எதிலும் முடிவு செய்கிறார்கள் என்று தோற்றுகிறது.

இன்னும் காலம் தாழ்ந்துவிடவில்லை. சட்டசபை அடுத்துக் கூடுவதற்குள், தமிழ்த் தலைவர்கள் சித்தூர் நிலைகளை நேரில் சென்று அறிந்து கொண்டு தக்க கிளர்ச்சி செய்யத்தான் வேண்டும். என்றைக்கும் உணர்ச்சி ஊட்டத் தக்க திருத் தலங்களையுடைய சித்தூர்ப் பகுதிகளை விடவே கூடாது. அவற்றால் என்றைக்கும் இடர் நேர ஏதுவிருக்கிறது.

தமிழ்த் தலைவர்கள் முழு அக்கறை காட்டினால் போதும். இவ்வகையில் தமிழர்களுக்கு வெற்றி கிட்டுவது உறுதி.

அங்குள்ள மக்களில் பலர் தெலுங்கு பேசினாலும் அவர்கள் எல்லாரும் எல்லா வகையிலும் தமிழ்நாட்டுறவே உடைய தமிழ் மக்கள்.

ஆந்திர மாகாணம், தகராறற்ற ஆந்திர மாவட்டங்களைக் கொண்டே அமைக்கப்படும் என்று இந்திய அரசின் சார்பில் நேரு உறுதி கூறினார். முழுதும் தகராறுள்ள பகுதி சித்தூர் மாவட்டம். அதனை அப்படியே ஆந்திர மாகாணத்தோடு சேர்த்தது, முன் பேச்சுக்குப் பின் முடிவு முரணாக இருக்கிறது. தலைவர்கள் இதை எடுத்துக் காட்டிச் சித்தூரை ஒஞ்சியுள்ள சென்னை மாகாணத்தில் சேர்க்குமாறு கேட்... டும். பின் எல்லைக் ... முடிவுப்படி சி... மாவட்டத்தைப் பிரித்துக் கொள்ளலாம். தமிழ்த் தலைவர்கள் இதை உடன

அருள் துறை

* நெஞ்சு விடு தூது *

(முத்துசாமி)

இறைவன் வழிபாடு:

"வெற்பின் பிசை.....குணவன்"

மலையின் மேல் இரக்கத்தால் இறங்கி வந்திருக்க வல்லவன். தன்னை மதியாத முப்புராதிகளின் கோட்டைகளைச் சிவந்த ஞான அழலில் மூழ்கி அழிந்து போகும்படி சிரித்தபிரான். அழிவில்லாத வேத முடிவாகிய உபநிஷத்தின் விளைந்த விளைவாகிய சித்தாந்தத்தில் மேலும் விளைவாகாமல் அதனளவாகவே நிறைந்த ஒளிவண்ணமானவன்; ஆதியானவன்; மலப் பொருளல்லாதவன்; மலத்தினாடு கலந்திருந்தாலும் அதனால் தாக்குறாதவன். ஞானத்தை அறிவரால் ஏற்க, அங்ஙனம் ஏற்ற அளவில் ஞானமாய்ப் பின்னர் விளங்க, அப்படிப்பட்ட ஞானிகளின் உடலிலும் அடையாளத்திலும் அவர்கள் வணங்குவதற்குக் குறிக்கப் பட்ட பொருளிலும் புகுந்து நிற்கும் பண்புடையோன்.

ஆன்மா பாசத்தால் கட்டுப் பட்டு நிற்கும் நிலையைச் சொன்ன பின்னர் நெஞ்சத்தைப் பார்த்து இறைவனுடைய பெருமைகளை மேலும் விளக்குகிறார்.

நுட்பமான இறைவன் இறங்கி மண்மேல் வர வேண்டுமாயின், மண்ணில் உயர்ந்த இடமாகிய மலையில்தான் முதலில் தங்குவான். மலைகளிலும் மிக உயர்ந்த மலையாகிய கயிலாய மலையில்தான் தங்குவான். வானத்தில் பறந்து திரியும் பருந்து கழுகு முதலியன இறங்கி எங்கேனும் சற்று அமர வேண்டின் மிக உயரமான மரக்கிளையின் உச்சியிலேயே அல்லது கோபுரத்தின் உச்சியிலேயே அல்லது வீடுகளின் உச்சியிலேயே வந்திருக்கக் காணலாம். அது போல இறைவன் உயர்வான நிலையிலிருந்து இறங்கி வருவானாயின் முதலில் உயர்ந்த இடமாகிய மலைக்கே வருவானானமையின் கயிலைமலையைச் சொல்லி அங்கிருக்க வல்லான் என்றார்.

உயர்ந்த நிலையில் உள்ளார் தாழ்ந்த மக்களுக்கு இரங்குதல் அரிது. தாழ்ந்தவர்களைக் கண்டாலே எரிந்து விழுவர். இறைவன் உயர்ந்த நிலையிலிருந்... நம்மீது இர... இறங்கி வரு... இறங்கி வர, அ... பண்பும் வேண்டும்... வல்லமை; எல்லாராலும் ... இறங்கி வர முடியாததானமையா...

டியாக நேருவுக்கு எடுத்துக் காட்டி முடிவு தெரிந்துகொள்ள வேண்டும்.

தம் தவறுகளை உணர்ந்து, பழிக்கு ஆளாகாமல் இனியேனும் தமிழ்த் தலைவர்கள் ஊக்கமுடன் முன் வந்து வேலைசெய்ய வேண்டும்.

தமிழ் நாடு காங்கிரசுத் தலைவரும், ஆட்சித் தலைவரும், மக்களும் இந்நிலைகளைப்பற்றி நன்கு நினைத்து அக்கறைகொண்டு செயலாற்றினால் முடியாதது என்பது இல்லை. செயல் வீராகிய தலைவர்கள்சித்தூர் வகையில், இனி மிகுந்த கருத்துக் கொள்வார்களாக!

—ஆடலரசு.

நஞ்சன்கூடு பல்பொடி

பாக்டெரியாரின்

நம்பிக்கை பெற்ற ஆயுர்வேத உதவிகள்

காஸ்மஸ் கஸ்தூரி மாத்திரை

கர்ஜன் கோரோஜனை மாத்திரை

பாலக்ஸ் பேதியாக மாத்திரை

...ராக் குழந்தை டானிக்

...ஸ்,

54;

இறங்கி வந்து உதவுதல் ஒரு வல்லமை எனப்பட்டது. ஆகவே 'வந்திருக்க வல்லான்' என்றார்.

நல்லவரை மதியாதார் இறைவனுக்கு வேண்டாதவர். இறைவன் அத்தகையோரை மதிக்க மாட்டார். ஆகவே முப்புராதிகள் மதியாதார் எனப்பட்டார்கள். தம் ஆற்றலாலேயே யாவும்
... விடலாமெனத் தருக்கி
... சிரிந்த
... ரனா
... டு அர
... மூழ்கப்
... என வருவதால்
... அவர்கள் வல்ல
... ப அதாவது சூழலையே
... தான் என்க. மற்று அவர்
... ய அழித்தான் என்று
... ருளல்ல. அரணம்—
... டை; செந்தழல்—ஞானம்.
தீய ... குணங்கள் ஞானத்தில் மாயும். ஆகவே செந்தழலில், ஞானத்தில், மூழ்கச் செய்தான்.

அவர்களுடைய வல்லமையை அடக்க இறைவன் சிரித்தான். சிரித்த சிரிப்பிலிருந்து வந்த நெருப்பே அவர்களுடைய ஆற்றலை அழித்தது. மிக முயன்று வருத்தப்பட்டுப் போரிட்டு அழிக்கவில்லை. அவர்கள் ஆ...
...வை நினைத்துச் சிரி...
... அ...

தம். வேதமுடிவைக் கொண்டு இறைவனை எட்ட முடியாது; ஒருவாறுதான் அறிய முடியும்; அதன் விளைவாகிய சித்தாந்தத்தால் எட்டலாம். சித்தாந்தத்தில் மேலும் விளைய வேண்டிய நிலையில்லை யென்பார் 'விளைவு இல் ஒளி' என்றார். சித்தாந்தத்தால் இறைவனை அறியலாமானமையின் அங்ஙனம் அறிகிற நிலையில் அவன் ஆதி யெனப்படுவன். நாம் முதலில் அறிகிற நிலையைக் கொண்டே இறைவனை ஆதி யென்பது. மற்று, அவனுடைய இயல்பான நிலை அநாதியே.

இறைவன் மலப்பொருள்களில் ஒன்றல்லன். ஆகவே மலப்பொருள் அல்லாதவன் என்பார் அவனை 'அமலன்' என்றார். நிமலன் மலப் பொருள்களில் கலந்து இருந்தாலும் அதனால் தாக்குறாதவன்.

அருளாகிய ஞானம் ஒருவரால் போதிக்கப் படும்போது அது போதம் எனப்படும். சிவஞானத்தை விளக்கிச் சொல்ல வந்தார் மெய்கண்டார் தம் நூலில். அந்நிலையில் அந்த ஞானம் போதம் எனப்படுமானமையின் ...நூலருடைய நூல் 'சிவஞான ...போதம்' எனப்பட்டது. ஆகவே நாடு, வ...துக்குப் போதம் என்ற ...டுக் ... வந்தது அதனிடைப் ...ல் ... போதிக்கும் நிலையைக் கா...த்தென்க. போதிக்கப்படு ...கின்ற ஞானம் போதம் எனச் ...ல்லருக்கிச் சொல்லலாம். அங்ஙனம் ...ழ்க்வாதிக்கப்படுகிற ஞானத்தை ...க்கொபள...ர் தன் அறிவால் எற் ...தமிழ் நன்மக்களே அந்த ஞானம் ...ம், அவர்களோடுவாகவே அவனி ...ப்பத்தக்க இன்...யின் அவன் ...திஞர்களையும் தக்க...ல் அதுவும் ...ர் செய்து கொடுத்...ல்லப்படும். ...டுகளுக்கு அனுப்பும் நோக்கில்

தன்னறிவு வேலை செய்யும். வாங்கித் தெளிந்த பின்னர், தன் அறிவு அடங்கி வாங்கிய அது வேலை செய்யத் தொடங்கும். அந்நிலையில் அது மறுபடியும் ஞானம் என்ற பெயரைப் பெறும். இது, அருள் வந்து இறங்கும் முறை. இம்முறையில் ஞானம் பெற்றவர்கள் உடலிலும் இறைவன் தங்கியிருப்பன். அவர்கள் வணங்கி வழிபாடு செய்ய ஏற்படுத்திக் கொண்ட குறியிலும் அவன் இருப்பன். அவர்கள் உடம்பில் உள்ள சிவ வேடத்திலும் இறைவன் இருப்பன். இதனை யுணர்த்தவே 'குறியுள் புகுதும் குணவன்' என்றார். குறியென்ற சொல் உடம்பு, வேடம், வழிபாடு செய்ய வைத்த பொருள், இத்தனையும் உணர்த்தும்.

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில் சிறந்தது எங்கள் கிசான் டிரேட்மார்க்

பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53, கிடங்குத்தெரு சென்னை 1

குருகுலச் செய்தி

நடுநாட்டுத் திருப்பயணம்

தமிழகம் பண்டைக் காலத்தில் சேர சோழ பாண்டிய அரசர்களால் ஆளப்பட்ட மூன்று நாடுகளைக் கொண்டிருந்தது.

இந் நாடுகளில் சோழ நாடு வளத்திலும் பரப்பிலும் பெரியது. அந் நாட்டின் உட்பிரிவுகளாகத் தொண்ட நாடு, நடு நாடு முதலிய பகுதிகள் இருந்தன.

தொண்ட நாடு என்பது செங்கற்பட்டும், வடாற்காடு சிற்றூர் தென்னாற்காடு மாவட்டங்களின் சிற்சில பகுதிகளும் அடங்கியதாகும். வடக்கே திருக்காளத்தி முதல் தெற்கே திரு அரசிலி வரையிலும் உள்ள 32 திருவூர்கள் இந் நாட்டைச் சேர்ந்தவை.

நடு நாடு என்பது தென்னாற்காடு வடாற்காடு மாவட்டங்களின் பகுதிகள் அடங்கியதாகும். திருமுனைப்பாடி நாடு என்றும் இதற்கு ஒரு பெயர் உண்டு.

இந்நாடு, 'உலகுக்கு ஒருவர் ஒவ்வொரு வகையில்' எனத் தக்க செந்தமிழ்ச் சிவநெறிச் சான்றோர் பலரை அளித்திருக்கிறது. சைவ சமயாசிரியர் நால்வருள் இருவர் – அப்பரடிகளும், சுந்தரமூர்த்திகள் என்னும் திருநாவலூராரும்–இந் நாட்டிற் பிறந்து வளர்ந்து அருள் பெற்றவர்கள். சந்தானாசிரியர்களிலும் நால்வரில் இருவர்–மெய்கண்ட சிவமும், அருணந்தி சிவமும்–இந் நாட்டில் தோன்றி அருள் பெற்ற அருட் சான்றோர்களே.

இன்னும் பல நாயன்மார்களும், பிற்காலப் பெரியோர்களும் இந் நாட்டில் தோன்றியும் வாழ்ந்தும் நலம் செய்திருக்கின்றார்கள்.

குகை நமச்சிவாயர், குரு நமச்சிவாயர், சிவப்பிரகாசர், சைவ எல்லப்ப நாவலர் முதலியோர் திருவண்ணாமலையில் திகழ்ந்த பெரியோர்கள்.

சடையப்ப வள்ளலார் என்னும் புகழ் பெற்ற தமிழ்ச் செல்வர், கம்பர் முதலிய பெரும் புலவர்களை ஓம்பி வாழ்ந்ததும் இந் நாட்டிலேதான்.

வள்ளலாரடிகள் தம் அருள் ஞான விளக்கத்துக்கும் வாழ்க்கைக்கும் உற்ற இடம் எனத் தேர்ந்துகொண்ட வடலூரும் இந் நாட்டைச் சேர்ந்ததே.

இனி, திருப்பாதிரிப் புலியூர் ஞானியாரடிகள், அரவிந்தர், இரமணர் முதலியோர் இந்நாட்டைச் சேர்ந்த அண்மைக் காலச் சான்றோர்களாவர். இப்போதும் தமிழ் வளர்க்கும் மயிலம் சிவத்திரு. சிவஞான பாலைய அடிகளார், யோகி சுத்தானந்த பாரதியார், சனகரைப் போன்ற அரசியல் ஞானி எனத் தக்க திருவாளர் ஓ. பி. இராமசாமி ரெட்டியார் போன்ற பெரு மக்கள் இந் நாட்டை விளக்கிக்கொண்டிருக்கின்றனர்.

இதன் சிறப்பு எண்ண எண்ண வியக்கத்தக்கதாக இருக்கிறது.

இந் நாட்டிலுள்ள சி...
முறைப் பாடல் பெ...
ரண்டு திரு...
திரைத் திரு...
ஒருவருடன் செ...
தக்க வாய்ப்பு இ...
வாய்த்திருக்கிறது. அ...
அதனைத் தக்கபடி பயன்படுத்தி...
கொள்ளவாராக!

எம் ஆசிரியர் இளவழ...
னார் அவர்கள், சென்...
ஆண்டு, தாம் பிறந்த தொண்ட...
நாட்டுப் பாடல் பெற்ற திருவூ...
களை எல்லாம் வழிபட்டு அங்கங்கே அரிய பல விளக்கங்களையும் கொடுத்துக் கொண்டு வந்தார்கள்.

இப்போது அடுத்துள்ள நடு நாட்டுத் திருப்பயணத்தை மேற்கொண்டிருக்கிறார்கள்.

வரும் சில ஆண்டுகளில்
மு... கொங்கு நாடு, சோழ
நா... டிய நாடு, சேர நாடு,
ஈழ... நாடுகளை...
பட்...
தா...
பிரி...
மு...
செ...
வா...
து...

யு...
அ...
அ...
க...
நா...

யின், தமிழகமும் உலகமும் பல வகையில் தமிழ் நலமும் விழிப்பும், விளக்கமும் பெறும்.

இத்தகு செயல்களுக்குத் திருவருள் துணை எப்போதும் மிகுதியாகவே தமிழகத்துக்கு இருந்துகொண்டிருக்கின்றது. அதனால் அவ்வப்போது தக்கோரும் தோன்றுகின்றனர்.
[illegible] வர்களைத் தக்கபடி பயன்
[illegible] மேல் முயற்சி
[illegible] ாண்புது
[illegible] து.
[illegible] துலத்தைச்
[illegible] சிரியரை
[illegible] ண்ட
[illegible] த்தில்
[illegible]
களில் இவ்வள [illegible] பலரும் கலந்து [illegible] எளிதாகப் முடியும் என்று [illegible] கொள்ள யாது. குறைந்த [illegible] சால்ல முடி ணிக்கையுடைய இ [illegible] அளவு எண் கொண்டதாய், நம [illegible] ருவூர்களைக் மிகுந்த தொலைவு இ [illegible] மை அடுத்து இருப்பது நடுநாடுதா [illegible] ல்லாததாய் [illegible]

பாடல் பெற்ற [illegible]
விடாமல் தொடர்ந் [illegible] திருவூர்களை
[illegible] குலனும், [illegible] சன்று
[illegible] ருடன்
[illegible] ம் இத்
[illegible] ர்கள்
[illegible] ந்து
[illegible] ள்

சித்தூர்த் தமிழ்ப் பகுதிகள்

சமய உணர்வுடையோர்க்கு அழைப்பு!

பணிவார்ந்த வணக்கம் பல.

சமயத் தொடர்புடையவரால் திருத்தணி முதலிய இடங்கட்குக் கிளர்ச்சி செய்யப்படின் ஓரளவாவது உணர்ச்சி திரளும். இதற்கான கிளர்ச்சிக்குத் தமிழகத்தின் பொது மக்கள் எண்ணத்தை இப்பொழுதுள்ள அரசியல் சார்புடைய இயக்கங்களால் விரைந்து ஈர்க்க முடியாது.

தவிரவும், சமய உணர்வுடையார் மாட்டு இதன்கண் எழுப்பப்படும் வேட்கை, தொல்காப்பியர் தொட்டு "வடவேங்கடம் தென்குமரி ஆயிடை" என்று வழங்கி வருதலே போன்று நிலை கொண்டு வளர்ந்த பயன் நல்குவதாக அமையும்.

சித்தூர்த் தமிழரும் இயக்கம் தொடங்குகின்றனர். சென்னையிலும், தமிழகத்தின் உட்பகுதியிலும் கிளர்ச்சி செய்து, அவர்கட்குப் பொருளாலும் பிறவாலும் காலத்தில் உதவி செய்தல் சமயச் சார்புடையாராலன்றி இடையிடையே தோன்றி மறைந்து வரும் அரசியல் கட்சிகளால் இயலுவதன்று. அவைகள், 'கொள்கை' 'புகழ்' 'பதவி' என்றே எப்பொழுதும் கணக்கிட்டு எண்ணி, பயனளவை சீர்தூக்கி வேலை செய்யத் தொடங்கும். அவைகளால் கிளர்ச்சி தொடங்கப்படுவதற்குள் மற்றோர் கடல்கோள் நேரினும் நேரும்.

எனவே, தமிழ்ச் செல்வமும், தமிழகப் பற்றும், மெய்யுணர்வும், அரசியல் நோக்கும் ஒருங்கே கொண்டுள்ள சமயப்பெரியோர் இன்று உடனடியாக இப் பணியில் ஈடுபடுதல் வேண்டும்.

மங்கலம் கிழார் அவர்களைப் பின் பற்றி அன்னாருக்கு இன்று உதவியாகச் செல்லின், அதனினும் பெரும்பேறு தமிழகங் கண்டிராது.

சமயப் பெரியோர் முனையின் கட்சி வேறுபாடு கருதாது ஆதரவு வரும். பண்டு புலவர்கள் எவ்வளவோ அரசியல் நிகழ்ச்சிகளில் பங்குகொண்டு தூது சென்று அரும்பெருஞ்செயல்களை நிறைவேற்றியிருக்கின்றனர். தக்கோர், இன்று எல்லாக் கட்சியாரிடத்தும் ஆதரவு திரட்டிச் சித்தூர்த் தமிழர்க்கு அனுப்பத் தயங்க வேண்டாம்.

இறையுணர்வுடையாராகிய நல்லோர்க்குச் சிறியேன் மிகுதியாக எழுதத் தேவையில்லை. வேலை செய்ய வேண்டிய முறைகளைப் பற்றி ஒருவரோடு ஒருவர் கலந்து கொள்ளலாம். முயற்சி செய்ய விரும்புவோர், ஊக்கத்தைப் புலப்படுத்துதல் நன்று.

கடமைகளைச் செய்து வரும் சமயப் பெரியோர்களாலேயே நாடு பிழைத்து வருகிறது. தமிழகத்தின் எல்லைகளைத் தக்கபடி நிறுவிக் கொள்ள உதவுதல், இப்போது தமிழ்ச் சான்றோர்களின் தலைக்கடனாய் உள்ளது.

"செய்தக்க செய்யாமை
யானுங் கெடும்"

அன்புள்ள,

நடு நாட்டுத்
திருப்பயண விளம்பரம்

திருநெறிச் செல்வர்ர்!

எங்கள் குருகுலத் தலைவர் ஆசிரியர் இளவழகனுர் அவர்கள், சமயாசிரியர் நெறியைப் பின்பற்றிச், சென்ற ஆண்டு தொண்ட மண்டலத் திருப்பயணத்தை மேற்கொண்டு திருமுறைப் பாடல்பெற்ற திருவூர்களை எல்லாம் வழிபட்டார்கள்.

இவ்வாண்டு (விசய) சித்திரை உ-ஆம் நாள் (14-4-53) செவ்வாய் இரவு சென்னையிலிருந்து புறப்பட்டு நடுநாட்டிலுள்ள திருவூர்களை முறையே வழிபட்டுக் கொண்டு இயன்ற இடங்களில் அரிய சொற்பொழிவுகளும் நிகழ்த்தி வருவார்கள்.

ஆண்களும் பெண்களுமாகக் குருகுல அன்பர் இத் திருப்பயணத்தில் கலந்து கொள்ளுகிருர்கள்.

திருவாளர் ஓ. பி. இராமசாமி ரெட்டியார் அவர்களும், காட்டரண்பாக்கம், திரு. வரதாரெட்டியார் தம்பதிகளும் இத் திருப்பயணத்தை இனிது நடத்த இயன்ற உதவி செய்வதாக வாக்களித்து ஊக்கமூட்டியிருக்கிருர்கள்.

மற்ற அன்பர்களும், அடுத்த செவ்வாய்க் கிழமைக்குள் ஆசிரியரின் விரிவுரை இடங்களிலும், கீழ்க்கண்ட முகவரியிலும் குறிப்பிட்டுள்ள அன்பரிடம் நேரில் விவரங்களைக் கேட்டறிந்து, முறைப்படி தம் பெயர்களைப் பதிவு செய்து கொண்டு இத் திருப் பயணத்தில் கலந்து கொள்ளலாம்.

பெயர்ப் பதிவு செய்யும் அன்பர்:
திரு. வேதாசலம், ...தாஸ்
...கல்ஸ், 55-..., ...ட்டன்
...ரி, சென்னை-1.

திருப்பயண விவரங்கள்

நாள்	கிழமை	இரயில் நிலையம்	எண்	திருவூர்	நிலயத்திருந்து
14-4-53	செவ்வாய்	இரவு 8-30 மணிக்குச் சென்னைச் சிவனடியார் திருக்கூட்ட மண்டபத்திலிருந்து புறப்படுதல்.			
15-4-53	புதன்	திருவண்ணமலை	(1)	திருவண்ணமலை	மேற்(கே 1 கல்
16-4-53	வியாழன்	திருக்கோயிலூர்	(2)	கீழுர்	,, 1½ ,,
,,	,,	,,	(3)	அறையணி ... (பெண்ணைத்திக் ...	
17-4-53	வெள்ளி	முண்டியம்பாக்கம்	(4)	பு...	
,,	,,	சின்னபாபு சமுத்திரம்	(5)	வ...	
,,	,,	விழுப்புரம்	(6)	...	
18-4-53	சனி	திருத்துறையூர்	(...		
,,	,,	பண்ணுருட்டி	(...		
19-4-53	ஞாயிறு	திருப்பாதிரிப் புலியூர்	(9)	...	... ,,
,,	,,	,,	(10)	திரு... பாதிரிப்புலியூர்	மேற்கே ½ ,,
20-4-53	திங்கள்	ஆலப்பாக்கம்	(11)	தி... சோபுரம் (கடற்கரை)	கிழக்கே 1½ ,,
,,	,,	,,	(12)	திருத் தினைநகர்	தென் மேற்கே 6 ,,
21-4-53	செவ்வாய்	திருவெண்ணெய் நல்லூர் ரோடு	(13)	திருமுண்டீச்சரம்	மேற்கே 1 ,,
,,	,,	,,	(14)	...டையாறு	,, 6½ ,,
22-4-53	புதன்	,,	(15)	தி... வெண்ணெ... ந...	
23-4-53	வியாழன்	(இருந்தை)	(16)	...	
,,	,,	உளுந்தூர்ப் பேட்டை	(17)		
24-4-53	வெள்ளி	விருத்தாசலம் டவுன்	(18...		
,,	,,	,,	(19...		
,,	,,	,,	(20...		
25-4-53	சனி	பெண்ணுகடம்	(2...		
,,	,,	,,	(22)	...	
26-4-53	ஞாயிறு	வடலூர் வழியாகச்...			

பதிப்பித்து அச்சிட்டு வெளியிடுவோர்: இ.ச. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், ...